# மணப்பாறை நகராட்சி

**2020- ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் (08.10.2020) 08 – ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 04.00 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| 08.10.2020 | **பொருள் – 1**<br>தமிழ்நாடு நகரியியல் பயிற்சி மையம், கோயமுத்தூர் நிறுவனத்திற்கு 2020-21 ஆண்டிற்கு முதல் நிலை நகராட்சிகள் ரூ.50,000/- பங்குத் தொகை செலுத்த வேண்டும். அதன்படி இந்நகராட்சியின் பங்குத் தொகை ரூ.50,000/-அய் (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) தமிழ்நாடு நகரியியல் பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்தவும், செலவினத் தொகையை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம் | **தீர்மான எண்.855**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 08.10.2020 | **பொருள் – 2**<br>இந்நகராட்சி பொது சுகாதார LCV வாகனம் TN45CZ0358 கிளட்ச் பிளேட் பழுதடைந்துள்ளதால் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவும் , திடக்கழிவு மேலாண்மை திட்ட அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15-ன்படி, ரூ.4788/- செலவினம் மேற்கொள்ளப்பட்டது மன்றத்தின் பதிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு**<br>பதிவு செய்யலாம்.<br>(2715/2020/எச்2) | **தீர்மான எண்.856**<br>பதிவு **செய்யப்பட்டது** |

<table>
<tr><td>08.10.2020</td><td>பொருள் – 3<br>இந்நகராட்சி பொது சுகாதார LCV வாகனம் TN45CZ0310-ல் ஏற்பட்டுள்ள ரேடியேட்டர் பழுதுகள் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை முன்னிட்டும் திடக்க ழிவு மேலாண்மை திட்ட அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15-ன்கீழ் ரூ .2198/- தொகை செலவிடப்பட்டு மராமத்து செய்தமை மன்றத்தின் பதிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>பதிவு செய்யலாம்</td><td>தீர்மான எண்.857<br>பதிவு செய்யப்பட்டது</td></tr>
<tr><td>08.10.2020</td><td>பொருள் – 4<br>அரசாணை எண் .298 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் .02.09.2020-ல் கொரோனா நோய் தொற்று காரணமாக பிறப்பிக்கப்பட்ட பொது ஊரடங்கு காலத்தில் 01.04.2020 முதல் 31.05.2020 வரை உள்ள காலத்திற்கு உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படாத கடைகள் / குத்தகை இனங்களுக்கு வாடகை / குத்தகை தொகையினை (கேட்பு தொகை ) செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்து வரப்பெற்ற அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>பதிவு செய்யலாம்.</td><td>தீர்மான எண்.858<br>பதிவு செய்யப்பட்டது</td></tr>
<tr><td>08.10.2020</td><td>பொருள் - 5<br>2020-2021முதல் 2022-2023 முடிய மூன்று நிதியாண்டுகளுக்கான ஆண்டு குத்தகை இனங்களில், இந்நகராட்சிக்குச் சொந்தமான புதிய பேருந்து நிலையத்திற்குள் தொலைக்காட்சி பெட்டி வைத்துக்கொள்ளும் உரிமம் குத்தகை இனத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அழைப்பு நடவடிக்கைகள் 07.10.2020 அன்று மணப்பாறை நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்றது பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்டவாறு உள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><u>இனம் எண் - 2- புதிய பேருந்து நிலையத்திற்குள் தொலைக்காட்சி பெட்டி வைத்துக்கொள்ளும் குத்தகை உரிமம்</u><br><u>பொது ஏலம் மற்றும் ஒப்பத்தப்புள்ளி</u>
<table>
<tr><th>வ. எண்</th><th>பொது ஏலம் கோரியவர்/ ஒப்பந்தப்புள்ளி அளித்தவர் பெயர் மற்றும் முகவரி</th><th>உயர்ந்த பட்ச ஏலக்கேள்வி (ரூ. )</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூபாயில்)</th></tr>
<tr><td>1</td><td>திரு.எஸ்.சக்திவேல், காந்திநகர், மணப்பாறை.</td><td>ஏலத்தில் கேள்ளி ஏதுவும் கேட்கப்படவில்லை</td><td>-</td></tr>
</table></td><td>தீர்மான எண்.859<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 2 | திரு.U.ராமன்,19J/20,அழகிரிசாமிதெரு, மணப்பாறை. | – | 1,30,000/– |
| 3 | திரு.ஞானசேகர் ,த/பெ.பன்னிர் செல்வம், 15/154,குளத்துராபட்டி, அமயபுரம்(PO), மணப்பாறை. | – | 1,25,000/– |
| 4 | திரு.எஸ்.சக்திவேல், காந்திநகர், மணப்பாறை. | – | 43,000/– |

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. இனம் எண்–2, புதிய பேருந்து நிலையத்திற்குள் தொலைக்காட்சி பெட்டி வைத்துக்கொள்ளும் உரிமம் குத்தகை உரிமத்திற்கு ஓராண்டிற்கு உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகையாக ரூ.1,30,000/– (ரூபாய் ஒரு லட்சத்து முப்பதாயிரம் மட்டும்) வரிசை எண்–2ல் காணும் திரு. U.ராமன், 19J/20,அழகிரிசாமிதெரு, மணப்பாறை. என்பவர் கொடுத்துள்ளார் இத்தொகை சென்ற ஆண்டு தொகையை விட கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரி தொகையை விட கூடுதலாகவும் உள்ளதால் மேற்படி நபருக்கு உரிமம் வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

2. முதல் வருட குத்தகை தொகை ரூ.1,30,000/–ஐ அடிப்படையாகொண்டு குத்தகை உரிமம் ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2021 முடியவுள்ள காலங்களுக்குறிய குத்தகை தொகையை பெற்றுக்கொள்ளவும், இரண்டாம் ஆண்டிற்க்கு முதலாம் ஆண்டு குத்தகை தொகைரூ. 1,30,000/- உடன் 5% உயர்வு செய்தும், மூன்றாம் ஆண்டிற்கு இரண்டாம் ஆண்டு குத்தகை தொகையுடன் 5% உயர்வு செய்தும், கேட்பு நிர்ணயம் செய்து குத்தகை ஒப்படைப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்

---

08.10.2020

**பொருள் - 6**

**தீர்மான எண்.860**
**அனுமதிக்கப்பட்டது.**

இந்நகராட்சிக்கு சொந்தமான நாளங்காடி நுழைவு வாயில் புதிய கடை எண் 3 மூன்றாண்டு குத்தகை இனத்திற்க்கு 07.10.2020 அன்று மணப்பாறை நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>இனம் எண் – 4– நகராட்சிக்கு சொந்தமான நாளங்காடி நுழைவு வாயில் புதிய கடை எண்–3</u>**

| வ. எண் | பொது ஏலம் கோரியவர்/ ஒப்பந்தப்புள்ளி அளித்தவர் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்த பட்ச ஏலக்கேள்வி (ரூ. ) | ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1 | T.முகமதுஅலிஜின்னா, த/பெ.R.Hதிலாவர், 19/2, | ஏலக்கேள்வி எதுவும் இல்லை | |

| | | | |
|---|---|---|---|
| | திண்டுக்கல்ரோடு, மணப்பாறை | | |
| 2 | V.சந்திரசேகர், த/பெ.வேலுச்சாமி,<br>இராஜாளிப்பட்டி, புதுக்கோட்டை. | ஏலத்தில் கலந்துகொள்ளவில்லை | |
| 3 | P.பெரியசாமி, த/பெ.பழனிச்சாமி, புத்தாநத்தம்,<br>மணப்பாறை. | ஏலத்தில் கலந்துகொள்ளவில்லை | |
| 4 | எஸ்.ஹக்கிம், த/பெ.சையது ரசூல், 26/93,<br>மேற்குத்தெரு, புத்தாநத்தம், திருச்சி மாவட்டம். | ஏலத்தில் கலந்துகொள்ளவில்லை | |
| 5 | K.அமீர்பாட்ஷா, த.பெ.காசிம்<br>227,கோவிந்தராஜபுரம், மணப்பாறை. | ஏலக்கேள்வி எதுவும் இல்லை | |
| 6 | K.முருகதாஸ்,த/பெ.கிருஷ்ணன்,<br>20/155,இடையப்பட்டி,புத்தாநத்தம்(அஞ்சல்),<br>மணப்பாறை (தாலுகா) | ஏலக்கேள்வி எதுவும் இல்லை | |
| 7 | எஸ்.சக்திவேல், காந்திநகர், மணப்பாறை. | ஏலக்கேள்வி எதுவும் இல்லை | |
| 8 | A.ஜோசப்ராஜன்,260,அண்ணாவி நகர்,<br>மணப்பாறை. | 11,100/– | – |
| 9 | A.பெருமாள்,1/432,சோலைபட்டி,<br>F.கீழையூர்(அஞ்சல்), மணப்பாறை (தாலுகா) | 11,000/– | – |
| 10 | S.ஆரோக்கியம், 260,அண்ணாவி நகர்,<br>மணப்பாறை | ஏலத்தில் கலந்துகொள்ளவில்லை | |
| 11 | K.குணசேகர், பாம்பாடிபட்டி,மணப்பாறை. | ஏலக்கேள்வி எதுவும் இல்லை | |
| 12 | R.சபிஅஹமத், 82/181,கந்தி நகர்,<br>கோவில்பட்டி ரோடு, மணப்பாறை. | 10,900/– | – |
| 13 | A.ஹரிஸ், த/பெ.அன்பு செழியன்,<br>11,வெள்ளையன் தெரு, மணப்பாறை. | ஏலத்தில் கலந்துகொள்ளவில்லை | |
| 14 | A.அன்பு செழியன், த/பெ.ஆண்டவர்,<br>11,வெள்ளையன் தெரு, மணப்பாறை. | ஏலக்கேள்வி எதுவும் இல்லை | |
| 15 | P.கண்ணன்,திரு.வி.க.தெரு, செவலுர்,<br>மணப்பாறை. | ஏலக்கேள்வி எதுவும் இல்லை | |

| | | |
|---|---|---|
| 16 | P.கண்ணன்,116/6,கரிக்கான்குளம் தெரு, மணப்பாறைபட்டி ரோடு, மணப்பாறை. | ஏலக்கேள்வி எதுவும் இல்லை |
| 17 | P.K.சித்தார்த், 65,கோவில்பட்டி ரோடு, மணப்பாறை. | ஏலத்தில் கலந்துகொள்ளவில்லை |
| 18 | V.P.சஙகர், த.பெ.வி.பெருமாள், 14/1,ரிசர்வாயர் ரோடு,வாகைக்குளம் விஸ்தரிப்பு, மணப்பாறை. | ஏலக்கேள்வி எதுவும் இல்லை |
| **வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் பெயர் மற்றும் தொகை விவரங்கள்** | | |
| 1 | V. ஸ்ரீசங்கர், த/பெ.வேலு 71/1,அந்தோணியார் கோவில் தெரு, நொச்சிமேடு, மணப்பாறை. | 6501 |
| 2 | A.ஜென்னிஸ் மேரி, த/பெ.அடைக்கலம், 79,MPN 3 வது தெரு, முசிறி. | 5300 |
| 3 | A.ஜோன்ஸ் ரிச்சர்டு, த/பெ.குழந்தை ராஜ் 1/196,பாரதியார் நகர்,விராலிமலை ரோடு, மணப்பாறை. | 5600 |

**அலுவலகக்குறிப்பு**

1. மேற்குறிப்பிடப்பட்டவாறு நாளங்காடி நுழைவு வாயில் புதிய கடை எண் 3 –ற்கு பொது ஏலத்தில் திரு.A.ஜோசப்ராஜன், 260,அண்ணாவி நகர், மணப்பாறை என்பவர் உயர்ந்தபட்சமாக ரூ.11,100/–க்கு ஏலக்கேள்வி கோரியுள்ளார். இத்தொகை அரசாங்க மதிப்பீட்டு தொகையைவிட கூடுதலாக உள்ளதால் மேற்படி நபருக்கு குத்தகை உரிமம் வழங்கிட அனுமதிக்கலாம்.
2. அரசாணை (நிலை) எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி) துறை நாள்.03.07.2007–ன்படி மாத வாடகை அடிப்படையில் குத்தகை உரிமம் வழங்கிட அனுமதிக்கலாம்.

மேற்படி கடைகளின் உரிமம் மாத வாடகை அடிப்படையில் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்ககான முதல் காலத்தொகுப்பிற்கும், இரண்டாம் மூன்றாண்டு காலத்தொகுப்பிற்கு முதல் காலத்தொகுப்பின் அடிப்படை மாத வாடகையில் 15%உயர்வு செய்தும், மூன்றாவது காலத்தொகுப்பிற்கு இரண்டாம் காலத்தொகுப்பிற்கான மாத வாடகையில் 15% உயர்வு செய்து அனுமதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| 08.10.2020 | **பொருள்-7**<br>நகராட்சி நிர்வாக ஆணையாளர் , சென்னை அவர்களின் கடிதம் ந .க.எண்.32979/J2/2018 நாள்.25.03.2019ன்படி, இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளை முழுமையாக செயல்படுத்திட 107 பணியாளர்கள் கொண்டு ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டதன்பேரில், இந்நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளை செம்மையாக செயல்படுத்திட 01.09.2019 முதல் 31.08.2020 வரை சரம் என்விரோ சர்வீஸ் (பி)லிட், சென்னை என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு , கொரோனா நோய் பரவல் காரணமாக மேற்காணும் ஒப்பந்த நடவடிக்கை மேற்கொள்ள இயலவில்லை. பொது சுகாதார அவசர அவசியம் கருதி ஏற்கனவே பணி<br>சுணக்கம் மற்றும் வழுவின்றி செயல்பட்டு வந்த சரம் என்விரோ சர்வீஸ் (பி) லிட், சென்னை நிறுவனத்திற்கு 01.09.2020 முதல் 30.11.2020 வரை நகர்மன்ற தீர்மான எண்.832 நாள்.31.08.2020 வாயிலாக அனுமதி பெறப்பட்டு பணி உத்திரவு வழங்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக 01.12.2020 முதல் 30.11.2021 வரையிலான ஒரு ஆண்டு காலத்திற்கு 107 ஒப்பந்த பணியாளர்கள் கொண்டு மாவட்ட ஆட்சியர் , திருச்சி அவர்களின் பணியாளர் விலை விகித 2020-21-ம் வருட பட்டியல் வரப்பெறாததன் காரணமாக மாவட்ட ஆட் சியர், திருச்சி அவர்களின் 2019-2020 ஆம் ஆண்டு பணியாளர் விலை விகித பட்டியலின்படி , ரூ.385/- என்ற அடிப்படையில் ESI, EPF, நிர்வாக கட்டணங்கள் முதலிய உட்பட நாள் ஒன்றுக்கு பணியாளர் ஒன்றுக்கு ரூ .467.61/- என்று கணக்கீடு செய்து 01.12.2020 முதல் 30.11.2021 வரையிலான காலத்திற்கு 107 ஒப்பந்த பணியாளர்கள் கொண்டு பணி மேற்கொள்ள அனுமதியும் அதற்கான தோராய செலவினம் ரூ .156.11 செலவினம் மேற்கொள்ள அனுமதியும் நகர் மன்ற தீர்மான எண் .841 நாள்.14.09.2020-ன்படி, பெறப்பட்டு ஒப்பந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு 05.10.2020-ல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டது.<br>மாவட்ட ஆட்சியர் , திருச்சி அவர்களின் தூய்மை பணியாளர்கள் விழிக்கண் ஆய்வுக்கூட்ட அறிவுரை நாள்.06.10.2020-ல் சுகாதார பணிகள் மேற்கொள்ளும் தூய்மை பணியாளர்களுக்கு அந்தந்த ஆண்டுக்குரிய மாவட்ட ஆட்சியர் பணியாளர் ஊதிய விலை வி கித பட்டியல் அடிப்படையிலேயே ஊதியம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற அறிவுரை வழங்கியுள்ளார்கள்.<br>எனவே மாவட்ட ஆட்சியர் , திருச்சி அவர்களின் 2020-2021ம் ஆண்டுக்குரிய பணியாளர் ஊதிய பட்டியல் ந.க.எண்.RCJ3/973/2020 நாள்.11.07.2020 -ன்படி, 01.10.2020 முதல் 30.11.2021 வரையிலான | **தீர்மான எண்.861**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

ஒரு ஆண்டு காலத்திற்கு 107 பணியாளர்கள் கொண்டு சுகாதார பணிகள் மேற்கொள்ள ஒப்பந்த நடவடிக்கைக்கு திருத்திய மதிப்பீடு விபரம்

| வ. எண் | விபரம் | தொகை (நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு) |
|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சியர், திருச்சிராப்பள்ளி அவர்களின் 2020-21ஆண்டிற்கான விலை விகிதம் | 440.00/- |
| 2 | EPF Share (Employer - 12%) | 52.80/- |
| 3 | ESI Share (3.25%) | 14.30/- |
| 4 | Administrative Charges (5%) | 22.00/- |
| 5 | சீருடை (ரூ.1000/365 நாள்) | 2.73/- |
| 6 | காப்பீடு (0.5%) | 2.20/- |
| | நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு மொத்த ஊதியம் | 534.03/- |

நபர் ஒன்றுக்கு ஒரு மாதத்திற்கான ஊதியம் (26 நாட்கள் X 534. 03 ஞாயிறு நீங்கலாக) } 13884.78/-

நபர் ஒன்றுக்கு ஒரு ஆண்டிற்கான தொகை 12 மாதம் X 13884.78/- } 166617.36/-

107 நபருக்கு ஒரு ஆண்டிற்கு செலவிடப்படும் தொகை (107 நபர்கள் X 1666617.36/-) } 17828057.52/-

எனவே மேற்காணும் விபரப்படி 01.12.2020 முதல் 30.11.2021 வரையிலான ஓராண்டு காலத்திற்கு 107 ஒப்பந்த பணியாளர்கள் கொண்டு பணி செய்ய ஒப்பந்த நடவடிக்கை மேற்கொள்ள அனுமதியும், தமிழ்நாடு ஒப்பந்த விதிகளின்படி நாளிதழ் விளம்பரம் மேற்கொண்டு தொடர் நடவடிக்கைகளுக்கு அனுமதியும் அதற்கான தோராய செலவினம் 178.30 லட்சம் பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு**</u>

அனுமதிக்கலாம்

| | | |
|---|---|---|
| 08.10.2020 | **பொருள் - 8**<br>இந்நகராட்சி பகுதியில் மத்திய அரசின் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் (SBM) திறந்தவெளி கழிப்பிடமற்ற நகராட்சியாக அறிவிக்கும் பொருட்டு 2587 குடியிருப்புதாரர்களுக்கு தனி நபர் இல்ல கழிப்பிடம் (IHHL) கட்டுவதற்கு மான்யம் ஒதுக்கப்பட்டு கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேலும் கழிப்பிடம் கட்ட இடவசதி இல்லாத 195 குடியிருப்புகளுக்கு அருகில் 500 மீட்டர் சுற்றளவுக்குள் 20 சமுதாய கழிப்பிடங்களும் மேலும் வணிக பகுதிகளுக்கு வந்து செல்வோருக்கு ஏதுவாக 4 பொது கழிப்பிட வசதிகளும் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இதனடிப்படையில் மணப்பாறை நகராட்சி பகுதியில் போதிய கழிப்பிட வசதிகள் செய்யப்பட்டுள்ளதால் இந்நகராட்சியில் திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற நகராட்சியாக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது (ODF) தற்போது அதன் அடுத்த நிலையாக திறந்த வெளியில் மலம் மற்றும் சிறுநீர் கழித்தல் அற்ற நகராட்சியாக (ODF+) அறிவிப்பதற்கு நகராட்சி பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. எனவே இது குறித்து ஆட்சேபணைகள் உள்ளதா என்பதை பொதுமக்களிடமிருந்து கேட்டறிய தினசரி பத்திரிக்கை வாயிலாக அறிவிப்பு பிரசுரம் செய்யவும் அதற்கான செலவினத் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கலாம் | **தீர்மான எண்.862 அனுமதிக்கப்பட்டது.** |

**தனி அலுவலர்**
**மணப்பாறை நகராட்சி**